7.6.2023

PW-2 - Raju.

சாட்சி மீண்டும் ஆஜராகி முதல் விசாரணை தொடரப்படுகிறது.

முதல் விசாரணை தொடர்ச்சி

VK Finance, Sowcarpet, Chennai ன் உரிமையாளர் திரு. அமர்சந்த் கோத்தாரி அவர்கள் கம்பனியிடமிருந்து கடன் பெற்ற 29 வாகனங்களில் மாத தவணைத் தொகையை நீண்ட காலமாக செலுத்தாததாலும், RC Book கம்பனியிடம் சமர்பிக்காததாலும், இது குறித்து விசாரித்து வரும்படி கம்பனியில் இருந்து என்னை அனுப்பினார்கள். நான் திரு. அமர்சந்த் கோத்தாரி அவர்களின் அலுவலகம் அமைந்துள்ள Sowcarpet, Chennai-க்கு சென்று அவரிடம் விசாரித்தேன். அவர் 18.7.2008 தேதியிட்டு 2 கடிதங்களை தன் கைப்பட எழுதி என்னிடம் கொடுத்தார். அந்த கடிதத்துடன் 13 RC Book நகல்களை இணைத்து கொடுத்திருந்தார். மற்றொரு கடிதத்தில் 16 RC Book நகல்கள் பெறப்படவில்லை என்றும், பதிவு எண் தெரியவில்லை என்றும் குறிப்பிட்டு இருந்தார். இந்த கடிதங்களை கம்பனியில் சமர்பித்தேன். இது சம்பந்தமாக கம்பனி சார்பாக மேல் அதிகாரிகள் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் RC Book நகல்களின் உண்மை தன்மையை கண்டறிய விசாரித்த போது அவைகள் போலியானவை என்று தெரிய வந்தது. ஆகவே கம்பனி முடிவு செய்தபடி போலியான ஆவணங்களை சமர்பித்து கம்பனியில் இருந்து கடன் பெற்றார் என்று மாநில குற்ற புலனாய்வு துறை உயர் அதிகாரிகளிடம் புகார் அளித்தனர். இது சம்பந்தமாக என்னை 21.9.2008 அன்று விசாரித்தார்கள். நான் நடந்த விவரத்தை சொன்னேன்.

குறுக்கு விசாரணை- (எதிரி 1)

எதிரி 1-ன் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

எதிரி-2

ஸ்ரீராம் ட்ரான்ஸ்போர்ட் பைனான்ஸ் நிறுவனத்தில் நான் 2004 ஆம் ஆண்டு பணிக்கு சேர்ந்தேன். நான் Executive ஆக பணியில் சேர்ந்தேன். அங்கு எனது பணி

Franchisee-ல் கொடுக்கப்படும் ஆவணங்களை கம்பனியில் கொண்டு போய் கொடுப்பேன். 2008 ஆம் ஆண்டு 10 முதல் 13 Executives இருந்தார்கள். அவர்கள் எனக்கு Seniors or Juniors என்றால் எனக்கு தெரியாது. எல்லா Executives-களுக்கும் Franchisee ல் வேலை Allot செய்யப்படும். நான் B.E. படித்துள்ளேன். மேற்படி நிறுவனத்தில் Collection Agent என்ற post எதுவும் இல்லை. நான் வேலை பார்த்த அலுவலத்தில் Clerk இருப்பார்கள் என்றால் அவர்கள் அலுவலகத்தில் இருப்பார்கள். எனது Regional Manager திரு. ரமேஷ் என்பவர் ஆவணங்களை எடுத்து சென்று கம்பனியில் கொடுக்க உத்தரவிட்டார். திரு.ரமேஷ் சென்னை மைலாப்பூரில் உள்ள அலுவலகத்தில் இருப்பார். Sowcarpet மட்டும் தான் Franchisee உள்ளது. மைலாப்பூரில் இருப்பது Regional office. நான் வேலை பார்த்த அலுவலகத்தில் Manager என்ற post உள்ளது. எப்போது எல்லாம் Franchisee லிருந்து ஆவணங்கள் இருப்பதாக கூப்பிடுகிறார்களோ அப்போது நாங்கள் அங்கு சென்று ஆவணங்களை எடுத்து சென்று கம்பனியில் கொடுப்போம். அதே போல் கம்பனியில் எதாவது Statement of accounts, records பெற்று Franchisee-ல் கொடுப்போம். நான் தினமும் மைலாப்பூரில் உள்ள அலுவலகத்திற்கு காலை அல்லது மாலை report செய்ய வேண்டும். குறிப்பிட்ட தேதியில் எனக்கு ஆவணங்களை எடுத்து செல்ல உத்தரவிட்டது திரு. ரமேஷ் Regional Manager. அவர் 18.07.2008 அன்று காலையில் Regional அலுவலகம் செல்ல உத்தரவிடப்பட்டது. நான் சொன்னது போல் அன்றைய தினம் Regional Office-க்கு செல்லவில்லையென்றாலும் மேற்படி office-க்கு சென்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. திரு.ரமேஷ் வாய்மொழியாக உத்தரவிட்டார். Regional Office-ல் எனக்கு உத்தரவிடும் போது franchisee Manager உடன் இருந்தார். 18.07.2008 அன்று என்னை மட்டும் தான் ஆவணங்களை எடுத்து சென்று கொடுக்க உத்தரவிட்டார். எங்கள் நிறுவனத்தில் Attendance Register நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. ஆனால் Attendance Register பராமரிக்கப்படுகிறது. நான் காலையில் report செய்தால் மாலையில் report செய்தால் மாலையிலும் Attendance Register-ல் கையெழுத்திடுவேன். மேற்படி நிறுவனத்தால் பணி நியமன ஆணை வழங்கப்பட்டதா என்றால் வழங்கப்பட்டது. அதனை நான்

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. Identity card வழங்கப்பட்டதா என்றால் இல்லை, எனக்கு நினைவு தெரிந்து யாருக்கும் வழங்கப்படவில்லை. மேற்படி தேதியில் VK Finance-யிலிருந்து மட்டும் தான் ஆவணங்களை பெற்று வரும்படி சொன்னார்கள். நான் 10 மணி முதல் 12 மணிக்குள் VK Finance-க்கு சென்றேன். அங்கு உரிமையாளர் மட்டும் இருந்தார். நான் சொன்னது போல் மேற்படி நிறுவனத்தில் வேலை பார்க்கவில்லை என்றாலும், அவ்வாறு வேலை பார்த்திருந்தால் விசாரணை அதிகாரி அதனை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவத்தன்று நான் சொன்னது போல் ஆவணங்கள் எதையும் பெற்று வந்து கம்பனியில் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்கள் பொய்யானவை என்றால் சரியல்ல. காவல் துறையினர் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |